ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/8 - 2021 ජුනි මස 09 වැනි බදාදා - 2021.06.09

*2231/8 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 78

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, அனைத்து திரவப் பெற்றோலிய வாயு (LPG) உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு 12.5 கிலோகிராம் வீட்டுப் பாவனைக்கான சிலிண்டர்கள் நாடு பூராகவும் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் தேவையான அளவில் அனைத்து திரவப் பெற்றோலிய வாயு விற்பனை நிலையங்களிலும் காணப்பட வேண்டும் என இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

மேலும் எந்தவொரு வியாபாரியும் இலங்கையினுள் விற்பனை நோக்கத்திற்கான திரவப் பெற்றோலிய வாயு (LPG) உள்ளடங்கிய 12.5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டர்களை விற்பனை செய்ய மறுத்து உடைமையில், பாதுகாப்பில் மற்றும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது எனவும் அத்தகைய சிலிண்டர் வகையினை கொள்வனவு செய்யாது விடுமாறு பாவனையாளர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ வற்புறுத்த முடியாதெனவும் இத்தால் அறிவுறுத்தல் விடுக்கின்றது.

இப்பணிப்புரை, 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

மேஜர் ஜெனரல் **சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
2021, யூன் 09.

06-255

1A - PG 5459 — 225 (2021/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.